இயேசு ராஜா நம்ம ராஜா
ஜெயமே எடுத்தாரே
நாம் வெற்றிக் கொண்டாடுவோம்
இன்று பாடி கொண்டாடுவோம்

சர்ப்பங்களையும் தேள்களையும்
மிதிக்கவைத்தாரே-2
சகல சத்துருவின்
சகல வல்லமையும்
மேற்கொள்ளவைத்தாரே-2

பாவத்தின் மேலே பாடுகள் மேலே
ஜெயமே தந்தாரே-2
இவைகள் ஒன்றும் நம்மை
சேதப்படுத்தாதே
இயேசு நம்முடனே-2

மலைபோல் இருந்த சோதனை
எல்லாம் மிதித்து நொருக்கினாரே-2
பதரைபோல் ஆக்கி
தூக்கி எறிந்தாரே
தேடியும் காண்பதில்லையே-2

பொறுத்திருந்து கர்த்தர் செய்யும்
அதிசயம் பாருங்களே -2
இதுவரை கண்டுவந்த
எகிப்தியர் ஒருவரையும்
இனிமேல் காண்பதில்லையே-2